**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2023ம் ஆண்டு ஜூன் மாதம் 20 -ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054, சோபகிருது வருடம், ஆனி மாதம் 5 ம் நாள்**
**இடைநிலை மனு எண் - 2/2019**
**இன்**
**முதலேற்ப்பு வழக்கு எண். 205/2019**

---

ராக்கு ---மனுதாரர்/வாதி

/எதிர்/

1. நாகரத்தினம்
2. விவேகானந்தன்
3. நோபல் ரிச்
4. திருப்புவனம் நகராட்சி
   அதன் செயல் அலுவலர் மூலம் ---- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 25.04.2023 அன்று என்முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர்/வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K..மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜர் இல்லாததால், அவர்கள் ஒரு தரப்பு ஆக்கப்பட்டும், இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

எதிர்மனுதாரர்களோ அவரது ஆட்களோ, தாவா சொத்தில் உள்ள மனுதாரரின் அமைதியான அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக் கூடாதென தாவா மனு முடியும் வரை ஓர் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்திரவும், இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை உத்திரவும் பிறப்பிக்க கோரி மனு தாக்கல்.

**1. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

அ) மனுதாரர் இறந்து போன ரமேஷ்குமாரின் மனைவி ஆவார். 1ம் எதிர்மனுதாரர் ரமேஷ்குமாரின் தாயார் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் இறந்து போன ரமேஷ்குமாரின் மச்சினர் ஆவார். 3ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரின் மகன் ஆவார். மனுதாரருக்கும், ரமேஷ்குமாருக்கும் 10.03.2000ல் ரமேஷ்குமார் வீட்டில் வைத்து, இந்து முறைப்படி திருமணம் நடந்தது. அதன் பின்பு குடும்ப வாழ்க்கையை திருப்புவனத்தில் தொடங்கினர். தாவா சொத்தில் உரிமையாளரான ராசுப்பிள்ளை, 24.08.2007ம் தேதியிட்டு மனுதாரருக்கு

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2023.06.20 17:20:17 +0530

அதிகார முகவர் ஆவணம் எழுதி வைத்துள்ளார். மேற்படி இடத்தில் இருந்த பழைய வீட்டை இடித்து விட்டு, மூன்று தளங்களாக 16 வீடுகளை மனுதாரரின் சொந்த செலவிலும், நகைகளை விற்றும், பூர்வீக சொத்து வருமானத்திலும் கட்டியுள்ளார்.

ஆ) இறந்து போன ராஜேஷ்குமார் தொழிலுக்காக கடன் வாங்க வேண்டி இருந்ததால், அன்பாலும் பாசத்தாலும் மனுதாரர் தன் கணவர் பெயருக்கு, கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார். இந்நிலையில் ஒரு விபத்து காரணமாக 26.09.2013ல் இறந்துவிட்டார். 2007 முதல் எவ்வித இடைஞ்சலும் இன்றி மனுதாரர் அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்துக்கள் ரமேஷ்குமாருக்கு தனித்து பாத்தியப்பட்டதல்ல. மனுதாரரே மேற்படி சொத்துக்களை வாடகை பெற்றும் அனுபவித்து வருகிறார்.

இ) சட்டவிரோதமாக மனுதாரரை மேற்படி சொத்திலிருந்து வெளியேற்ற எதிர்மனுதாரர்கள் முயற்சிக்கிறார்கள். 03.08.2019அன்று மாலை 5 மணிக்கு அடியாட்களுடன் வந்த எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் இருந்து மனுதாரரை வெளியெற்றவும், சொத்தை எதிர்மனுதாரர்களிடம் ஒப்படைக்கவும் கூறி மிரட்டினார்கள். எனவே திருப்புவனம் காவல்நிலையத்தில் மனுதாரர் புகார் அளித்தார். அங்கு உரிமையியல் நீதிமன்றத்தை அணுக அறிவுறுத்தப்பட்டது. எதிர்மனுதாரர்களின் சட்ட விரோத நடவடிக்கையை நீதிமன்றம் மூலமே தடுத்து நிறுத்த முடியும்.

ஈ) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தங்கள் அதிகாரத்தை வைத்து, வரி மற்றும் தண்ணீர் இணைப்பில் 4ம் எதிர்மனுதாரரிடம் பெயர் மாற்றம் செய்து விடுவார்கள். இதனால் மனுதாரருக்கு பெறுத்த நஷ்டம் ஏற்படும். 4ம் எதிர்மனுதாரர் அரசு அதிகாரியாக இருப்பதால் பிரிவு 80 சி.பிசியின் படி அறிவிப்பு அனுப்புவதிலிருந்து விலக்கு கோரி மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது. எனவே அசல்வழக்கு முடியும் வரை மனுச்சொத்தில் மனுதராரின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என இடைகால உறுத்துக் கட்டளை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டள்ளது.

**2. <u>1, 2 எதிர்மனுதாரர்களின் எதிர்உரையின் சுருக்கம்:-</u>**

அ) மனு ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. அபிடவிட்டு பாரா 1ல் மனுதாரர் ரமேஷ்குமாரின் மனைவி என்று கூறியிருப்பது பொய். சொத்தை அபகரிக்க வேண்டியே இவ்விதம் பொய்யாக கூறப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி ரமேஷ்குமாரின் மச்சான் என்பதும் 3ம் பிதிவாதி 2ம் பிரதிவாதியின் மகன் என்பதும் உண்மை. 10.03.2000ம் தேதியில் மதுரை அண்ணாநகர் எஸ்.என்.பி காலனியில், மனுதாரர் ரமேஷ்குமாரை 1, 2 எதிர்மனுதாரர்கள் முன்னிலையில் திருமணம் செய்தார் என்பதும், திருப்புவனத்தில் குடும்ப வாழ்க்கை ஆரம்பித்தார்கள் என்பதும் சுத்த பொய். மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் ரமேஷ்குமார், சாகும்வரை தான் அனாதை என்று

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.20 17:20:30 +0530

கூறிவிட்டு அதற்கு மாறாக ரமேஷ்குமாரை திருமணம் செய்ததாக மனுதாரர் இவ்வழக்கில் கூறியுள்ளார்.

ஆ) இதற்குமுன் பல்வேறு இடங்களில் நடைபெற்ற வழக்குகள் எங்குமே மனுதாரர் 10.03.2000ம் தேதியிட்ட திருமணத்தைப் பற்றி கூறவில்லை. மனுதாரரின் மூத்த மகனான ரமேஷ்குமார் யாரையும் திருமணம் செய்யவில்லை. அவர் யாரையும் திருமணம் செய்யும் எண்ணமின்றி முறைதவறி வாழந்தார். ரமேஷ்குமார் மதுரை கே.கே.நகர் எஸ்.பி.கே ஹோட்டல் அருகே விபத்திற்கு ஆளாகி தலையில் காயம் ஏற்பட்டு மதுரை கே.கே.நகர் ஹன்னாஜோசப் மருத்துவமனையில் 20 நாட்கள் வரை சிகிச்சையிலிருந்து 26.09.2013ம் மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். பெருந்தொகை செலவிட்டும் ரமேஷ்குமாரை காப்பாற்ற இயலவில்லை.

இ) ரமேஷ்குமார் மதுரையில் நிரந்தரமாக வசித்தார். திருப்புவனத்தில் வசிக்கவில்லை. மனு பாரா-4 ல் கண்ட சங்கதிகள் மறுக்கப்படுகிறது. ராசுப்பிள்ளை மனுதாரருக்கு அதிகாரமுகவர் ஆவணம் எழுதிக் கொடுத்ததாக கூறியுள்ள விவரத்தை மனுதாரர் இதற்குமுன் எந்த நடவடிக்கைகளிலும் தெரிவிக்கவில்லை. கடனுக்காக அதிகாரமுகவர் ஆவணம் எழுதிக் கொடுத்ததாகக் கூறுவது பொய்யானது. பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, 3 மாடிகளில் 16 வீடுகளை மனுதாரர் தன் சொந்த வருமானத்தில் நகைகளை விற்று கட்டியதாகக் கூறுவது பொய்.

ஈ) மனுதாரர் எந்தத் தேதியில் அனுமதி வாங்கப்பட்டது என்பதைக் கூறவில்லை. ரமேஷ்குமார் மீது இருந்த அன்பாலும் பாசத்தாலும் வங்கிக் கடனுக்காக வேண்டி மனுதாரர் எழுதிக் கொடுத்ததாகக் கூறுவது பொய். அது ரமேஷ்குமாரின் சொந்த வருமானத்தில் வாங்கப்பட்டது. 21.07.2008, 7.12.2010 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் ராசுப்பிள்ளையின் அதிகார முகவராக மனுதாரர் ரமேஷ்குமாருக்கு கிரையம் கொடுத்துள்ளார். அதில் கிரைய தொகை தெளிவாக கூறப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஆவணத்தில் ஓட்டு வீடு என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குமாறாக மனுதாரர் 3 மாடியில் வீடுகட்ட கிரைய ஆவணம் எழுதியதாகக் கூறியுள்ளார்.

உ) 2007 முதல் மனுச்சொத்தை மனுதாரர் அனுபவித்து வருவதாக கூறுவது பொய். மேற்படி சொத்தானது ராக்கு காம்பவுண்டு என்று அழைக்கப்படுகிறது. மனுசொத்து ரமேஷ்குமாரால் கிரையம் வாங்கப்பட்டது. மனுதாரர் அதில் வாடகைதாரர் ஆவார். ரமேஷ்குமார் காலியிடமாக கிரையம் வாங்கி அதில் வீடு கட்டியுள்ளார். ரமேஷ்குமார் மதுரையில் வசித்ததால், அவர் அனுமதியின் பேரில் மற்ற வாடகைதாரரிடம், வாடகை வசூலித்து வந்தார். ரமேஷ்குமார் இறப்பை சாதகமாக எடுத்துக் கொண்டு, எதிர்மனுதாரரின் வயோதிக சூழ்நிலையை பயன்படுத்தி சொத்தை அபகரிக்க பொய்யான ஆவணத்தை மனுதாரர் உற்பத்தி செய்துள்ளார்.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.20 17:20:42 +0530

ஊ) மனுதாரரின் கெட்ட எண்ணத்தின் பேரில், மனுதாரரை மனைவி என்றும், பாண்டியராஜன், செல்லம்மாள் ஆகியோரை மகன், மகள் என்றும் திருப்புவனம் வட்டாச்சியர் 19.02.2014-ல் போலியாக வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார். அதில் ரமேஷ்குமார் திருப்புவனத்தில் 26.09.2013 ல் இறந்ததாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் மதுரை ஹானாஜோசப் மருத்துவமனையில் ரமேஷ்குமார் இறந்தார். மதுரை டி.எம்.நகர் ஜி2 பிளாக் 2 மீனு என்கிளவ் வீட்டு எண்.5 ல் வசித்தார். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வாரிசு சான்றிதழில் காட்டப்படவில்லை. திருமணம் நடந்ததாகக் கூறப்படும் 10.03.2000 ல் மேற்படி பாண்டியராஜனுக்கு 26 வயது, செல்லம்மாள் 22 வயதுடையவர் ஆவார்.

எ) கிரைய ஆவணத்திலேயே மனுதாரர் கருப்பணன் அம்பலம் மகள் என்றுதான் காட்டியுள்ளார். ரமேஷ்குமாரின் மனைவி என்று காட்டவில்லை. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ரிட் மனு எண். W.P.(MD) NO.3575/2018 ல் 21.2.2018ம் தேதியிட்ட உத்தரவில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்யும் முன்பு எங்குமே மனுதாரர் திருமணத்தைப் பற்றி கூறவில்லை. ரமேஷ்குமாரின் மற்ற உறவினர் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடந்ததாகக் கூறியுள்ளார். மோசடியான வாரிசு சான்றிதலை ரத்துசெய்ய சிவகங்கை வருவாய் கோட்டாச்சிரிடம் மனு கொடுத்து விசாரணைக்கு பின்பு சிவகங்கை வருவாய் கோட்டாச்சியர் 10.07.2019ம் தேதியிட்டு ரத்து செய்துள்ளார்.

ஏ) மேற்படி விவரம் மனுதாரரால் இவ்வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது. திருப்புவனம் டவுன் பஞ்சாயத்தில் மேற்படி மோசடியான வாரிசுசான்றை வைத்து மனுதாரர் ஏற்படுத்திய பெயர் மாற்றங்கள் ரத்து செய்யப்பட்டு, மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2ம் மனுதாரர் 3.8.2019ம் தேதியில் மதுரையில் இல்லை அவர் டில்லியில் இருந்தார். 3ம் மனுதாரர் வெளிநாட்டில் இருந்தார். 3.08.2019ம் தேதி 5.30 மணிக்கு மனுதாரரை வெளியேற்ற முயற்சித்ததாக பொய்யாக தடையுத்தரவு பெறவேண்டி சொல்லப்பட்டுள்ளது. 4ம் எதிர்மனுதாரரும் மனுதாரின் அனுபவத்தை இடைஞ்சல் செய்வதாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே பிரிவு 41(1) Specific Relif Act -ன் படி மனுதாரருக்கு தடையுத்தரவு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி என்பது மனுதாரர் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5.** இம்மனுவில் இரு தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 10 வரையிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் 7 வரையிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.** தாவாசொத்தை பொறுத்து மனுதாரருக்கு ராசுப்பிள்ளை எழுதி வைத்த

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.20 17:20:55 +0530

அதிகாரமுகவர் ஆவணம் ம.சா.ஆ.1 ஆகவும், தாவாசொத்தைப் பொறுத்து மனுதாரர் பெயரில் உள்ள சொத்துவரி ரசீதுகள் ம.சா.ஆ.2 வரிசையாகவும், மின் கட்டண ரசீதுகள் ம.சா.ஆ.3 வரிசையாகவும், ரமேஷ்குமாருக்கு வாதி அதிகாரமுகவர் நிலையில் எழுதி வைத்த கிரைய ஆவணம் ம.சா.ஆ.6 மற்றும் மா.சா.ஆ.7 ஆகவும், ரமேஷ்குமாரின் இறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.8 ஆகவும், வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.9 ஆகவும், இருளாயி என்பவர் மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த கடை வாடகை ஒப்பந்த ஆவணம் ம.சா.ஆ.10 ஆகவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** பிரதிவாதி தரப்பில் ரமேஷ்குமாருக்கு வாதி அதிகாரமுகவர் நிலையில் எழுதி வைத்த கிரைய ஆவணம் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.மா.சா.ஆ.2 ஆகவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு புகைப்பட நகல் எ.ம.சா.ஆ.3 ஆகவும், வாதி பெயருக்கு கதவு எண்.104,104/1 முதல் 8, 19/1 க்கான ஆகியவற்றின் சொத்துவரி மதிப்பு ரமேஷ்குமார் பெயரிலிருந்து வாதி பெயருக்கு மாற்றப்பட்ட உத்தரவு ரத்து செய்த உத்தரவு எ.ம.சா.ஆ.4 ஆகவும், வாரிசு சான்றிதழ் ரத்து செய்யப்பட்டது தொடர்பான விசாரணை அறிக்கைகள் நகல் எ.ம.சா.ஆ.5 ஆகவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு புகைப்பட நகல் எ.ம.சா.ஆ.6 ஆகவும், வாரிசு சான்றிதழ் ரத்து செய்யப்பட்டதற்கான உத்தரவு நகல் எ.ம.சா.ஆ.7 ஆகவும் பிரதிவாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 , ம.சா.ஆ.10 ஆகியவற்றின் அடிப்படையில் வாதியே தாவாசொத்தில் இன்றுவரை அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பது மனுதாரர்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்வதால் மனுதாரருக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எனவே மனுவை அனுமதித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்தரப்பில் வாதிடப்பட்டது.

**9.** எ.ம.சா.ஆ.7 ன் அடிப்படையில் எ.ம.சா.ஆ.4 பிறப்பிக்கப்பட்டு, மனுதாரர் பெயரில் ஏற்பட்ட மோசடியான உத்தரவுகள் திருப்புவனம் நகராட்சியால் ரத்து செய்யப்பட்டு விட்டதாகவும், ரத்து செய்யப்பட்ட உத்தரவின் படி உற்பத்தி செய்யப்பட்ட ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களும் நசித்து போய் விட்டது என்றும், மனுதாரர் மோசடியாக செயல்பட்டு உற்பத்தி செய்த ஆவணங்களின் அடிப்படையில் அனுபவத்தை நிரூபணம் செய்துள்ளதாக எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும், எனவே மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது.

**10.** அசல் வழக்கானது நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. எ.ம.சா.ஆ.7 மற்றும் எ.ம.சா.ஆ.4 ன் அடிப்படையில் தாவாசொத்துக்கள் வாதி பெயருக்கு ஏற்பட்ட பெயர்மாற்ற உத்தரவு ரத்து

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.20 17:21:07 +0530

செய்யப்பட்டுவிட்டதாக தெரிய வருகிறது. வாதி தாக்கல் செய்த ம.சா.ஆ.6, ம.சா.ஆ.7 ஆகியவை எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களிலும் ரமேஷ்குமாரின் மனைவி ராக்கு என குறிப்பிடப்படவில்லை. எனவே, அசல்வழக்கின் முழுமையான விசாரணைக்கு பின்பே இவ்வழக்கில் வாதி ரமேஷ்குமாரின் மனைவி என்ற நிலையில் தாவாசொத்தை அனுபவம் செய்து வந்தாரா என்பதை முடிவு செய்ய இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசல் வழக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதே பரிகாரத்தை இடைக்கால மனுவில் வழங்குவது சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் முரணானது என்ற எதிர்மனுதாரர்களின் வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.** மேலும் வழக்குச் சொத்தில் மனுதாரர் ரமேஷகுமாரின் மனைவி என்ற நிலையில் தாவாசொத்தை அனுபவம் செய்து வந்தாரா என்பதை அசல்வழக்கின் விசாரணைக்கு பின்பே தீர்மானிக்க இயலும் என்ற நிலையிலும், எ.ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.7 ன் அடிப்படையில், இம்மனுவில் மனுதாரர்களுக்கு முதல் நோக்கு வழக்கோ 'Balance of convenience' இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் 20 -ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.20 17:21:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:** இல்லை

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.08.2007 | பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | - | சொத்துவரி ரசீதுகள் (10 எண்ணம்) |
| வா.சா.ஆ.3 | - | மின்கட்டண ரசீதுகள் (10 எண்ணம்) |
| வா.சா.ஆ.4 | - | வாதியின் ஆதார் அட்டை புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.5 | - | வாதியின் குடும்ப அட்டை புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.6 | 07.12.2010 | கிரைய ஆவணம் புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.7 | 21.07.2008 | கிரைய ஆவணம் புகைப்பட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | - | ரமேஷ்குமார் என்பவரின் இறப்புச்சான்றிதழ் புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.9 | 19.02.2014 | வாரிசு சான்றிதழ் புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.10 | 25.01.2010 | வாடகை ஒப்பந்த பத்திரம் அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>** இல்லை

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 21.07.2008 | கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 07.12.2010 | கிரைய ஆவணம் புகைப்பட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 21.02.2018 | மாண்பமை சென்னைஉயர்நீதிமன்ற மதுரைகிளை WP.(MD) No.3575 of 2018 and W.M.P.(MD) Nos.3707 and 3708 of 2018 உத்தரவு புகைப்படநகல் |
| பி.வா.சா.ஆ.4 | 13.08.2019 | திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் உத்தரவு புகைப்பட நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 28.08.2019 | திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலக குறிப்பாணை நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 22.10.2018 | மாண்பமை சென்னைஉயர்நீதிமன்ற மதுரைகிளை WP.(MD) No.19345 of 2018 and W.M.P.(MD) Nos.17177 2018 உத்தரவு புகைப்படநகல் |
| பி.வா.சா.ஆ.7 | 21.01.2022 | சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணை சார்பு நகல் |

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.20 17:21:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.